உ

கடவுள் துணை.

சதுரகிரி

அறப்பளீசுர சதகம்,

அம்பலவாணக்கவிராயர்

அருளிச் செய்தது,

இஃது

சிதம்பரம்

கருணானந்த சுவாமிகளால்

பார்வையிடப்பட்டுச்,

சிந்தாதிரிப்பேட்டை

நாராயணசாமி முதலியார்

அண்டுசன் அவர்களது.

பிரபாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப் பட்டது.

1896 ௵

सीता ॥ १ ॥ [illegible]
[illegible] ॥
[illegible]
[illegible] ॥
इति रोदिति ॥

रामः ॥ सखे किमेतत् ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥
[illegible] ॥ २ ॥ [illegible]
[illegible] ॥ [illegible]
[illegible] ॥

इति विजयानु परिक्रामति ॥

रामः ॥ [illegible] ॥ [illegible]
[illegible] ॥
तथाहि ॥ ३ ॥ [illegible]
[illegible] किं [illegible]
[illegible] । [illegible]
[illegible]
[illegible] ॥
मारीचः ॥ विमृश्य ॥ स्वगतम् ॥ मारीचकृतमेतद्वृत्तम् ॥
रामः ॥ [illegible] ॥ [illegible]
[illegible] ॥ इति [illegible] ॥
मारीचः ॥ स्वगतम् ॥ [illegible] ॥
४ ॥ [illegible]
[illegible] ॥
[illegible]
[illegible] ।
[illegible] ॥ [illegible] ॥ उप
सृत्य ॥ [illegible] ॥

உ

கடவுள் துணை.

சதுரகிரி

அறப்பளீசுர சதகம்,

அம்பலவாணக்கவிராயர்

அருளிச் செய்தது,

இஃது

சிதம்பரம்

கருணானந்தசுவாமிகளால்

பார்வையிடப்பட்டுச்,

சிந்தாதிரிப்பேட்டை

நாராயணசாமி முதலியார்

ஆண்டுசன் அவர்களது.

பிரபாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப் பட்டது.

1896 ௵

உ

சிவமயம்.

அறப்பளீசுரசதகம்.

காப்பு.

வெண்பா.

உம்பர்கோனெம்பெருமா னேக்கறப்பளீசுரன்மேச்
னைம்பொருள்சேருஞ்சதகம்பாட-வேயம்புவியோர்
ஆக்குந்துதிக்கையுளா னன்புடையார்க்கின்பருளிக்
காக்குந்துதிக்கையுளான் காப்பு.

உயிர்பிறப்பு.

கடலுலகில்வாழு முயிரெழுபிறப்பினுண் மிக்ககாட்சிபெறு நரசன்மமாய், கருதப்பிறத்தலரிததினு முயர்சாதியிற்கற்பு வழிவருதலரிது. வடிவமுடனவயவங்குறையாது பிழையாதுவருதலது தனினுமரிது, வந்தாலுமிதுபுண்ணியமிது பாவமென்றெண்ணி மாசில்வழியற்றலரிது நெடியதன வானாதலரிதி னிரக்கமுள நெஞ்சினேனாதலரிது, நேசமுடனுண்பதத் தன்பனாய்வருதலிந்நிலத்ததினுமரிதாம், அடியவர்க்கமுதமேமோழைபூபதிபெற்றவதிபனெமதருமை மதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரி வளரறப்பளீசுரதேவனே. ௧

மனையாட்டிசிறப்பு.

கணவனுக்கினியளாய் மிர்துபாஷியாய்மிக்ககமலைநிகருபவதியாய், சாய்ச்சினமிலாளுமாய் கோய்பழியிலாததோர்கால் வழியில்வந்தவளுமாய், மணமிக்கநாணமடமச்சமபயிர்ப்பென்ன வருமினியமார்க்க வதியாய், மாமிமாமற்கிதஞ் செய்பவளுமாய்வாசல் வருவிருந்தோம்புப வளாய், இனையின்மகிழ்நன்சொல்வழி நிற்பவளுமாய் வந்தியென் பெயரிலாத வளுமாய், இரதியெனவே லீலைபுரிபவளுமாயப்பிறர்தமில் வழிசெலாதவளுமாய், அணியிழையொருத்தி யுண்டாயினவள் கற்புடையளாகு மெமதருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரி வளரறப்பளீசுரதேவனே, ௨

நன்மக்கட்பேறு.

தன்குலம்விளங்கிடப் பெரியோர்கள் செய்துவருகருமங்கள் செய்துவரலும். தன்மைமிகுதானங்கள் செய்தலுங்கன யோகசாதகனெனப்படுதலும், மங்குதலிலாததன் றந்தைதாய்குருமொழிமறாதுவழிபாடுசெயலும், வழிவழிவருந்தமது தேவதாபத்திபுரிமார்க்கமுந் தீர்க்காயுளும், இங்கிதகுணங்களும் வித்தையும் புத்தியு மீகையுஞ்சன் மார்க்கமும். இவையெலா முடையவன்புதல்வனாமவனையே யீன்றவன் புண்ணியவானா

ம், அங்கசவிரோதியேசோதியே நீதிசேராசன மதருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசதுர கிரிவளரறப்பளீசுரதேவனே. ரு

சகோதரரொருமை.

கூடப்பிறந்தவர்க்கெய்து துயர் தமது துயர் கொள்சுகந்தஞ் சுகமெனக், கொண்டுதாந்தேடு பொருளவர்தேடு பொருளவர்கொள்கோதில்புகழ் தம்புகழெனத்தேடுற்றவர் நிந்தைதந்தவந் தீதிலவர்தவமாமெனச், சிவனென்றுடல்வேறிவர்க்கென்னவந்தலைச் சிறரவமணிவாய் தொறும், கூடுற்றவிரை யெடுத்தோருடனிறை டிடுங் கொள்கைபோற்பிறவின்றியே, கூடிவாழ்பவர்தம்மையே சகோதரரெனக்கூறுவதுவேதருமமாம், ஆடிச்சிவந்த செந்தாமரைப்பாதனே யண்ணலெமதருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. சு

சற்குருவியல்பு.

வேதாந்தசித்தாந்த வழிதெரிந்தாசார விவரமெய்ஞ் ஞானபூரண, வித்யாவிசேஷசற்குணசத்யசம்பன்ன வீரவைராக்கியமுகய, சாதாரணப்பிரியபோக மார்க்காதிக்பசமாதிநிஷ்டானுபவராய்ச் சட்சமய நிலைமையும் பரமந்த்ரபரதந்த்ரருமமும்பரசமயமும், நீதியினுணர்ந்து தத்துவமார்க்கமாய்ப் பிரமநிலைகண்டு பாசமிலராய், நிதியானந்தசை தன்னியராயாசையனு நெறியுளோர் சற்குருவதாம், ஆதாரமாயுயிர்க் குயிராகியெவைவுமாயமலனெமதருமை மதவேள், அநுதினமு மனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௯

நன்மாணாக்கரியல்பு.

வைதாலுமோர் கொடுமை செய்தாலுமோசிறி மாறு திகழ்ந்தாலுமோ, மனதுசற்றுகிலுங்கோணாது நாணுதுமாதாபிதாவெனக்குப், பொய்யாமனீயென்று கனிவோடும் பணிவிடை புரிந்துபொருளுடலாவியும், யுனிதவுன்றனதெனத்தந்தஞ் செய்திரவுபகல் போற்றிமலரடியில் வீழ்ந்துமெய்ச கவேபரவியு பதேசமதுபெற விரும்புவோர்நச்சீடராம், வினைவேரறும்படியவர்க்கருள் செய்திடுவதே மிக்கதேசிகாது கடன், ஐயாபுரம்பொடிபடச்செய்த செம்மலேயண்ணலெமதருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. சூ

பொருள்செயல்வகை,

புண்ணியவசத்தினாற்செல்வமதுவறவேண்டும் பொருளை ரட்சிக்கவேண்டும், புத்தியுடனதுவொன்று நூறாகவேசெய்துபோதவும் வளர்க்கவேண்டும், உண்ணவேண்டும்பின்புநல்லவஸ்திராபரணமுடலிற்றரிக்கவேண்டும், உற்றபெரியோர்கவிஞர் தமராதுலர்க்குகவியோங்கு புகழ்தேடவேண்டும், மண்ணில்வெகுதருமங்கள்செயவேண்டுமுயர் மோக்ஷவழிதேடவேண்டுமன்றி, வறிதிற்புதைத்துவைத்தியாதபேர்களே மாக்கமறியர்க்குருடராம், அண்ணலேகங்கா குலத்தலைவன்மோழை தருமமுகனெம தருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. எ

தீவழிவிலக்கு.

வஞ்சகர்தமைக்கூடி மருவொண்ணாதன்பிலார் வாசலிற் செல்லொண்ணாது, வாதவசிடத்திலும்புரியொண்ணாதறிவிலாமடையர்முன்னிற்கொண்ணாது, கொஞ்சமேனுந்தீதுசெய்யொண்ணாதொருவர்மேற் குற்றமென்றெண்ணொண்ணாது, கோதையர்களோடுபரிகாசஞ்செய்யொண்ணாது. கோளுரைகள்பேசொண்ணாது, நஞ்சுதருமரவெடும்பழகொண்ணாதிருள்வழி நடந்து தனியேகொண்ணாது, நதிபெருக்காகினதினீஞ்சல்செய்யொண்ணாதுநல்வழிமறக்கொண்ணாது, அஞ்சாமலரசர்முன் பேசொண்ணாதிவையெலா மறியுமெமதருமைமதவேள், அநுதினமுமனதிநினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே

ஒன்றற்கொன்றழகுசெய்வன.

வாழ்மனைதனக்கழகு குலமங்கைகுலமங்கை வாழ்விணுக்கழகுசிறுவர், வளர்சிறுவருக்கழகு கல்விகல்விக்கழகுமாநிலந்துதிசெய்குணமாம், சூழ்குணமதற்கழகு பேரறிவுபேரறிவுதோன்றிடிலதற்கழகுதான், தூயதவமேன்மையுபகாரவிரதம்பொறுமை சொல்லறியபெரியோர்களைத் தாழ்தல்பணிவிடைபுரிதல் சீலனேகங்கருணைசாற்றுமிவையாமென்பர் காண், சௌரிமலரோனமரர்முனிவர்முச்சுடரெலாஞ் சரணமெனரட்சியெனவே, ஆழ்கடலுதித்துவருவிடமுண்டகண்டனேயண்ணலேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௯

ஒன்றிலாமையாற்பயன்படாதவை.

கோவில்லாதவூர் நாசியில்லாமுகம் கொழுநனில்லாதமடவார் குணமதில்லாவித்தை மணமதில்லாதமலர் குஞ்சரமிலாதசேனை, காவலில்லாதபயிர்பாலரில்லாதமனை கதிர்மதியிலாதவானம், கவிஞரில்லாதசபை சுதிலயமிலாதபண் காவரில்லாததேசம், ஈவதில்லாததனநியமமில்லாதசெப மிசைலவணமில்லாதவூண், இச்சையில்லாதபெண்போகமிவைதம்பி னேதுபலனுண்டுகண்டாய், ஆவியனையாட்கிடக்கந்தவாகற்பதருவாகுமெமதருமைமதவேள் அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௰

ஒன்றற்கொன்றுதகாதசேர்க்கை

பூததயையில்லாத லோபியரிடத்திலே பொருளையருளிச், செய்ததனை, புண்ணியஞ்செய்கின்றசற்சனரிடத்திலேபொல்லாதமிடிவைத்ததனை நீதியகன்மூடர்க்கருந்ததியெனத்தக்க நெறிமாதரைத்தந்ததனை, நிதானமுளவுத்தமர்க்கிங்கிதமிலாத கொடுநீலியைச்சேர்வித்ததனை, சாதியிலுயர்ந்தபேரீனர்பின்னேசென்றுதாழ்ந்துபரவச்செய்ததனை, தமிழருமையறியாதபுல்லர்மேற்கவிவாணர் தாம்பாடவேசெய்ததனை, ஆதாவிலாமலிப்படிசெய்த தென்சொலாயமலவெமதருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௧௧

குணக்கேடரியல்பு.

மாறுதகலைகற்றுநிலைபெற்றசபையிலேவாயிலாதவனொருபதர், வாள்பிடித்தெதிரிவரினோடிப் பதுங்கிமனைக்கோழைதானொருபதர், ஏறுவ

முக்குறைத் தனைவருந்திசீசியென் றிகழ்நிற்பா னொருபதர், இல்லாள்புறஞ் செலச் சம்மதித்தவனோடிணங்கிவாழ் பவனொருபதர், வேறொருவர்மெச்சாதுதன்னையேதான்மெச்சி வீண்பேசுவா னொருபதர், வேசையர்களாசைகொண்டுள்ளளவு மனையாளை விட்டுவிடுவா னொருபதர், ஆறுதுய ரையுமிடியையுந் தீரத்தருள்செயமலைமகளருமைமதவேள் அநுதினமு மனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௧௨

செயத்தக்கவை,

வாலிபந்தனில்வித்தை கற்கவேண்டுங்கற்றவழியிலேநிற்கவேண்டும், வளைகடலிருந்து பொருடேடவேண்டுந் தேடிவளரறஞ்செய்யவேண்டும், சிலமுடையோர்களைச் சேரவேண்டும்பிரிதல்செய்யாதிருக்கவேண்டும், செந்தமிழ்ப்பாடல்பலகொள்ளவேண்டுங்கொண்டு தியாகங்கொடுக்கவேண்டும், ஞாலமிசைபலதருமம் நாட்டவேண்டுங் காட்டி நன்றாய்நடத்தவேண்டும், நம்பனிணையடிபூசை பண்ணவேண்டும்பண்ணினாலுமிகு பத்திவேண்டும், ஆலமர்க்கண்டனே பூதியணிமுண்டனேயனகனெமதருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௰௩

மேன்மேலுயர்ச்சி.

தன்மட்டிலிறவாது சீவனஞ்செய்பவன் சாமர்த்தியமுளபுருஷனும், சந்ததம்பதின்மரைக்காப்பாற்றுவோன் மிக்கதரணிபுகழ்தருதேவனும், பொன்மட்டிலாமலீந் தொருநூறுபேரைப்புரப்பவன்பொருவிலிந்திரன். புவிமீதிலாயிரம்பேர்தமைக்காப்பாற்றுபுண்ணியவானேபிரமனும், நன்மைதருபதினாயிரம் பேர்தமைக்காத்தாரட்சிப்பவன் செங்கண்மால், நாளுமவன்மேலதிகமாகவெகுபேர்க்குதவுநரனேமகாதேவனும், அன்மட்டுவார்குழலி பாகனேயேகனேயண்ணலெமதருமைமதவேள் அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௰௪

செயற்கருஞ்செயல்.

நீர்மேனடக்கலா மெட்டியுந்தின்னலா நெருப்பைநீர்போற்செய்யலாம், கொடியபெருவேங்கையைக்கட்டியே தழுவலா நீளரவினைப்பூணலாம், பார்மீதுமணலைச்சமைக்கலாஞ்சோறெனப்பட்சமுடனேயுண்ணலாம், பாணமொடுகுண்டு விலகச்செய்யலா மரப்பாவை பேசப்பண்ணலாம், ஏர்மேவுகாடியுங்கடையுற்றவெண்ணெயு மெடுக்கலாம்புத்திசற்றும், இல்லாதமூடர்தம்மனதைத்திருப்பவேயெவருக்குமுடியாதுகாண், ஆர்மேவுகொன்றை புனைவேணியாய் சுரவுமமலனே யருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே, ௰௫

உத்தமராவோர்,

செய்நன்றிமறவாதபேர்களுமொருவர்செய்தீமையைமறந்தபேரும், திரவியந்தாரரினு மொருவர்மனையாட்டிமேற் சித்தம்வையாதபேரும், கைகண்டெடுத்தபொருள்கொண்டுபோய் பொருளாளர்கையிற்கொடுத்தபேரும், காசினியிலொருவர்செய்தருமங்கெடாதபடி காத்தருள்செய்தின்றபேரும், பொய்யொன்றுநிதிகோடிவரினு மொழிக்கழிவுபுகலாதிருந்த

பேரும், புவிமீதுதலைபோகுமென்னினுங்கனவிலும்பொய்யை யுரையாத பேரும், ஐயமின்றியிவரெலாஞ் சற்புருஷரென்று யகிலமகிழ்வதருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே.

இதுவுமது.

அடைக்கலமெனத்தேடி வருவோர்தமைக்காக்குமவனேமகாபுருஷனும், அஞ்சாமலெதுவரினுமெதுபோகினுஞ் சித்தமனசலியான்மகாதீரனும், தொடுத்தொன்றுசொன்னசொற்றப் பாதுசெய்கின்றதோன்றலே மகாராஜனும், தூறிக்கலைக்கின்றபேர்வார்த்தை கேளாததுரையேமகாமேருவாம், அடுக்கின்றபேர்களுக்குவருமிடர்தீர்த்துரட்சிக்குமவனே மகாதியாகியாம், அவரவர்தராதரமறிந்து மரியாதைசெயுமவனே மகாவுசிதனும், அடர்கின்றமுத்தலைச்சூலனே சோமனே யமலனேயருமைமதவேள், அநுதினமு மனதினினைதருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே.

ஒன்றிலொன்றில்லாமை.

காமிக்குமுறையில்லை வேசைக்கு நாணமில்லை கயவர்க்குமேன்மையில்லை, கன்னமிடுகள் வருக்கிருளில்லை விபசாரகன்னியர்க்காணையில்லை, தாமெனுமயக்கருக்கோங்குபெரியோர்க்குவருசாதிகுலமென்பதில்லை தாட்சண்ணியமுடையபேர்க்கிகலில்லையெங்குமொருசார் பிலார்க்கிடமதில்லை, பூமிக்குளீயாதலோபர்க்குவளமானபுகழென்பதொன்றுமில்லை, புலையற்குநிசமில்லை கைப்பொருளிலாததோர் புருஷருக்கொன்றுமில்லை, யாமினிதனக்குநிகர்கர்த்தாத்திறைவனேயன்புடையவருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௧௮

யாக்கைநிலைமைமுதலியவை.

காயமொருமற்புதம்வாழ்வுமலைசூழ்கருங்காட்டிலாதின்பெருக்காம் கருணைதருபுதல்வர்களைமனைமனைவி யிவையெலாக்கானல்காட்டும், பிரவாகம்மேயபுசபலவலுமை யிளமையழகிவையெலாம்வெயின்மஞ்களுயிர்தானுமே; வெட்டவெளிதனில்வைத்ததீபமெனவேசருதிவீண்பொழுதுபோகாமலே, நேயமுடனேதெளிந்தன் பொடுன்பாதத்தினினைவுவைத்திருபோதிலும்; நீர்கொண்டுமலர்கொண்டுபரிவுகொண்டர்ச்சிக்கநிமலனேயருள்புரிகுவாய், யுமறிவாளா பணிபாதனேபோதனேயண்ணலெமதருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே.

௧௯

திருமங்கையிருப்பிடம்,

நற்பரிமுகத்திலேமன்னவரிடத்திலே நாகரீகமாமனையிலே, நளினமலர்தன்னிலே கூவிளந்தருவிலே நறைகொண்டபைந்துளவிலே, கற்புடையர்வடிவிலேகடலிலேகொடியிலே கல்லியாணவாயிற்தனிலே, கடிநகரிடத்திலே நற்சென்னல்விளைவிலேகதிர்பெருவிளக்கதனிலே, பொற்புடையசங்கி லேமிக்கோர்கள்வாக்கி லேபொய்யாதபேர்பாலிலே, பூந்தடந்தன்னிலேபாற்குடத்திடையிலே போதகத்தின்சிரசிலே. அற்பெ

ருங்கோதை மலர்மங்கைவாழிட மெனபரண்ணலைமதருமைமதவேள், அநுதினமுமன தினினைதருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௨௰

மூதேவியிருப்பிடம்.

பிதயின்றியன்னம் புசிப்போரிடத்திலு மிகுபாஷையோரிடத்தும் மெய்யொன்றிலாமலேபொய்பேசியேதிரியுமிக்கபாதகரிடத்துஞ்சதியொன்றுமிலர்மேலமலினங்கொளும்பழையசந்தைபணிவோரிடத்தும், கடிநாயெனச்சீறி யெவரையுஞ்சேர்க்காதகன்னிவாழ்மனையகத்தும், தகிசேர்கடத்திலுங் கற்பத்திடயிலுஞ்சார்ந்தவாட்டின் றிரளிலும சாம்பிணமுகத்திலுமிவ யெலாங்கவலைபுரிதௌவைவாழுமிடமென்பர்காண், அதிருபமலைமங்கைநேசனேமோழை தருவழகனெமதருமை மதவேள். அநுதினமுமன தினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௨௧

குணுகுணமிரண்டிலும் பயன்படாதவை.

குணமற்றபேயமுருங் கைத்தழைதழைத்தென்னகுட்டநோய்கொண்டுமென்ன, குலைக்கின்றநாய்மடிசுரந்தென்ன சுரஞ்வாதுகொசமாய்ப்போகிலென்ன, மணமற்றசெம்முருக் கதுபூர்த்தவர்ந்தென்ன மலராதுபோகிலென்ன, மதுரமில்லாவுவர்க்கடனீர்கறுத்தென்ன மாவெண்மையாகிலென்ன, உணவற்றபேய்ச்சுரைபடர்ந்தென்னபடராதுலர்ந்துதான்போகிலென்ன, வுதவாதபேர்க்குவெகுவாழ்வுவந்தாலென்னவோங்குமிவரிலென்னகாண், அணியுற்றபைங்கொன்றைமாலிகாபரணனேயண்ணலைமதருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௨௨

குறைவுற்றுங்குணக் கொடாமை.

தறிபட்டசந்தனக் கட்டைபழுதாயினுஞ்சார்மணம்பழுதாகுமோ, தக்கபால்சுவரிடக்காச்சினும் மதுகொண்டுசாரமதுரங்குறையுமோ, நிறைபட்டகதிர்மணி யழுக்கடைந்தாலுமதினீள்குண மழுங்கிவிடுமோ, நெருப்பிடையுருக்கினு மடிக்கினுந் தங்கத்தினிறையுமாற்றுக் குறையுமோ, கறைப்பட்டபைம்புயன்மறைந்தாலுமதுகொண்டு கதிர்மதிகனம்போகுமோ, கற்றபெரியோர் மகிமையற்பரறிகிலரெனுங் காசினிதனிர்போகுமோ, அறிவுற்றபேரைவிட்டகலாதமூர்த்தியேயையனேயருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே

இதற்குதவிசெய்வதுஇதுவெனல்.

வானவர்பிதிர்க்கண முச்சுடர் மூவர்கோள்கட்கும் வாழ்வுதருமுதவிபுவனம், வளமிகசபுவனந்தனக்கு மேன்மேலுதவி வாழ்வுபெற்றிடுமன்னராம், தேனமர்நறுக்கொடையல் புனைமன்னவர்க் குதவிசேர்ந்தகுடி படைவர்க்கமாம், சேர்குடிபடைக்குதவி விளைபயர்பயிர்க்குதவிசீர்பெற வழங்குமழையாம், மேனிமிர்மழைக்குதவி மடமாதர்கற்பொன்று வேந்தாத நீதியொன்று; வேதியரொழுக்கமொன் றியமுன்

னுமே யென்று மிக்கபெரியோருரைசெய்வார், ஆனமாநெடுங்கொடியுய ர்த்தவெம்மிறைவனே யதிபனே யருமைமதவேள், அனுதினமுமனதி னினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௨௪

இதனைக்கண்டுமகிழ்வது இதுவெனல்.

தந்தைதாய்மலர்முகங் கண்டுகளிப்பதவர்தந்த சந்ததியதாம், சந்திரோதயங்கண்டு பூரிப்பதுபரவைதண்குவளைக்குமுதமலராம், புந்தி மகிழ்வாயிரவியுதயங்கண்டு மகிழ்வ பொங்குதாமரைமலர்களாம், போ தவும்புயல்கண்டிணைகளித்தேநடம் புரிவதுமயூரவினமாம், சிந்தைமகி ழ்வாயுதவு தாதாவினைக்கண்டு சீர்பெறுவதிரவலர்குழாம், திகழ்நீதிமன் னரைக்கண்டுகளிகூர்வதிச்செகமெலாமென்பர்கண்டாய், அந்திமவா னையசெஞ்சடாடவியிலேயமலனே யருமைமதவேள், அனுதினமும னதினினை சதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௨௫

அதுவதுவாகாமை.

உள்ளன்பிலாதபேரித்தித்தபேசியுறவாடுமுறவுமுறவோ, உ பசரித்தன்புடன்பரிமாறிடாதசோறுண்டவர்க்கன்னமாமோ, தள்ளாதி ருந்துகொண்டொருவர்போய்ப்பார்த்துவருதற்பயிர்பயிராகுமோ, தள கர்த்தனொருவனில்லாமன்முன்சென்றிடுந்தானையுந்தானையாமோ, விள் ளாதபோகமில்லாத பெண்மேல்வருவிருப்பமும்விருப்பமாமோ, வெகு கடன்பட்டபேர்செய்கின்றசீவனமுமிக்கசீவனமாகுமோ, அள்ளாதிரு ள் நருணையாளனே தேவர்தொழுமாதியேயருமைமதவேள், அனுதினமு மனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௨௬

நற்குணங்களுக்கிடமாகாதவர்.

வெறிகொண்டமற்கடம்பேய்கொண்டுகள்ளுண்டு வெங்காஞ்சொ றிப்புதலிலே, வீழ்ந்துதேள்கொட்டிடச்சன்மார்க்கமெள்ளளவு மேவு மோமேவாதுபோல், துறைகின்றபுத்தியாயிலற்பசாதியாய்க்கூடவே யிளமையுமுண்டாய்க், கொஞ்சமாமதிகாரமுங்கிடைத்தால்மிக்க குவலயந்த னிலவர்க்கு நிறைகின்றபுத்தியுஞ் சீலமுமேன்மையு ஞானமும்பெரி யோர்க்கண்மேல்நேசமும், மீசையும்மிவையெலாங்கனவிலு நினைவிலு வாராதுகண்டாய் அறைகின்றசுருதியின்பொருளானவள்ளலே யண்ண லேயருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீ சுரதேவனே. ௨௭

இதனாலின்னமுறையாமெனல்.

தன்னான்முடிக்கவொண்ணாதகாரியம்வந்துதன்முடிப்போன்றனை யனுமை, தன்றலைக்கிடர்வந்தபோது மீட்டுவோன்றாய் தந்தையென்ன லாகும், ஒன்னார்செயுங்கொடுமையானமெலிவுவந்தபோது தவுவோனிட் டதெய்வம், யுத்திபுத்திகள்சொல்லி மேல்வருங்காரிய முறைப்பவன்கு ருவென்னலாம், என்னொருத்தருக்கன்மை தீமைதனைதன்னதே யெண்ணி

வருவோன்பந்துவாம், இருதயமறிந்துதன் சொற்படிநடக்குமவ னெவனெனினுமவனேசுதன், அங்காரமூம்பணியு மெங்காளுமேபுனையு மண்ணலேயருமைமதவேள் அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. உஅ

அவரவரிடத்துநடக்குமுறை.

மாதாபிதாவெனுக்குள்ளன்புடன் கனிவுமாறாதநல்லொழுக்கம், மருவுகுருவானவர்க்கினியவுபசாரமுளவார்த்தை வழிபாடடக்கம், தாதார்கநுங்கண்மனையாடனக்கோசயல காலதிசாகய டாஷாணம், கற்றபெரியோர் முதியர்வருபாதுவர்க்கெலாங்கருணை சோருள்விசானைய்நீதிபெறுமன்னவரிடத்திற்பயவினையநெறியுடையபேர்க்கிங்கிதப்,,நேயமுளதமர்தமக்கமகிழ்வுடன்பரிவு நேயரிடத்தில்வயிரம் ஆதிமறநூல்சொலுவழங்கமிதுவாகுமெமைசயினையருமைமதவேள், அனுதினமு மனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. உகூ

குணத்தைவிற்றுக்குற்றத்தைக்கவர்தல்.

துஷ்டவிடக்கவிலையயாருமே பெச்சுவார்க்கொல்லுநற்கவினையமெச்சார், துச்சனர்க்ககமகிழ்ந்துபசரிப்பார்பெருந்துயரைத்தள்ளிவிடுவார், இஷ்டமுளதெய்வந்தனைக்கருதிடார்க்கருப்பெண்ணிமேலாமேயோய்ப்பணிகுர், ஈன்றதாய்தந்தையுபசற்றுமதியார் வேசையென்னிலோகாவிக்ஷிழ்வார், நஷ்டலாபங்களுக்குள்ளானபந்துவரினன்றுகவே பேசிடார்நாளுமெப்பாரியாய் வஞ்சபுத்துரவுக்குநன்மைபலவேசெய்குவார், அஷ்டதிசை சூழ்புவியிலோங்குகலிமகிமைகாணத்தகாவே யருமைமதவேள் அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௩௰

குணங்காண்குறி.

கற்றோர்களென்பதைச்சிலமுடனே சொலுங்கனவாக்கினாற்காணலாம், கற்புளாரென்பதைப்பார்க்கின்றபார்வையொடு காணடையினுங்காணலாம், அற்றோர்களென்பதனையொன்றிலும் வாராவடக்கத்தினாலறியலாம், அறமுளோரென்பதைப்பூத்தயையென்னுநிலையதுகண்டுதானறியலாம் விதமோங்குபயிராக்கினைத்துவருதடியினால் விளையுமென்றேயறியலாம், வீரமுடையோரென்ப தோங்கிவருதைரியவிசேஷத்தினாலறியலாம், அந்தர்குணத்தினால் குலகலன்தெரியலா மண்ணலேயருமைமதவேள் அனுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௩௧

கூடிற்பயன்படல்.

செத்தைபலகூடியொருகயிறாயினதுகொண்டு திண்கரியையுங்கட்டலாம், திகழ்ந்துபலதுளிகூடியாறாயின்வாவியொடு திரளேரிநிறைவிக்கலாம், ஒத்தநுண்பஞ்சுபலசேர்ந்து நூலாயிடினுடுத்திடும் கலையாக்கலாம், ஒவ்வொருகோலுடன்சிலையுங் கூடினாலுயர் கவிகையாக் கொள்ளலாம், மற்றுமுயர் தண்டுலத்தோடுதவுடுமிக்கூடின் மட்குமுளை விளை

விந்நாம், மனமொத்தநேயமொடு கூடியொருவர்க்கொருவர் வாழின் வெகுவெற்றிபெறலாம், அற்றகனியைப்பொருத்தரிபிரமாதேடரியவ மலரோனயநனைமதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௩௨

அத்தற்றுவெற்றியிடம்.

கலைவலாருக்கதிகசயமதுராவாக்கிலே சாமூர்க்கதிகசயமோர், கைப்பொருளிலேவரு மருந்துவர்க்கோசயங்கைவிசேஷந்தன்னிலே. நன்முடையவேசியர்க்கழகிலேயரசர்க்குராளுநரணசூரத்திலே, நற்றவர்க்கதிகசய முலகுபுகழ்பொறையிலே ஞானவேதியர்த்தமக்கோ, குலமகிமைதன்னிலேவைசியர்க்கோசயங் கூறியதுலாக்கோலிலே குற்றமில்லாதவேளாளருக்கோசயங்குறயாதகொழுமுனையிலே, அலையிலசுதினைக்குநடைவேகத்திலதிசெயமாமென்பரநுமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௩௩

ஒன்றனில்லாமையாற்பாழ்படல்.

தாம்பூலதாரணமிலாதவேதவரு பூர்ணசந்த்ரனிகர்முகசூனியம், சற்சனரிலாததே வெகுசெனச்சேர்ந்துவாழ்கரும் பெரியநகர்சூனியம், மெம்பாடிலாதமன்னவர்கள்வந் தாள்வதேமிக்க தேசச்சூனியம், மிக்கசுர்புத்திரனில்லாததே நலமானவீடுசேர்கிறசூனியம், சோம்பாதகலைவரில்லாதசேதவளமுடன் சொல்லுயர்சபாசூனியம், தொல்லுலகிலனைவர்க்குமாநிதியமில்லாத தேகந்தசூனியமென்பர்காண், ஆம்பல்வதனத்தனைதந்தனைபெற்றருள்செய்தவனை யருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௩௪

மூடர்தாரதம்மியம்

பெண்புத்திகேட்கின்ற மூடருக்கந்தை தாய்ப்பிழைபுறஞ்சொலு மூடரும், பெரியோர்கள்சபையிலே முகடேறிவந்தமுபிகற்றிடும்பெருமூடரும், பண்புற்றசுற்றருஞ்சிறிக்கவேயிழிவானபழிதொழில்செய்திடுமூடரும், பற்றற்றபேர்க்குமுனபிணைநின்றுபின்புபோய்ப்பாதவித்திடுமூடரும், கண்கெட்டமாடென்னவோடி யிரவலர்மீதுகாய்ந்துவீழ்ந்திடுமூடரும், கற்றறிவிலாதமுழுமூடருக்கெல்லாங்கான் மூடரைமூடர்காண், அண்கற்றநாவலர்காக்கவே தூதுபோனமையனே யருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே.

இதற்கு இதுவேண்டுமெனல்.

தனக்குவெகு புத்திபுண்டாகினும் வேறொருவர் தப்புத்திகேட்கவேண்டும், காதிகசூரனேயாகினும் கூடவேதள சேகரங்கள்வேண்டும், கனக்கின்றவித்துவானாகினுந் தன்னினுங்கற்றோரை நத்தவேண்டும், நாசினியையொருகுடையி லாண்டாலும் வாசலிற்கருத்துள்ளபந்திரிவேண்டும். தொனிக்கின்றசங்கீதசாமர்த்தியனாகினுஞ் சுதிகூட்ட ஒருவன்வேண்டும், சுடர்விளக்காயினு நன்றாய்விளக்கிடத் தூண்டு

கோலொன்றும்வேண்டும், அனற்கண்ணனை படிகசங்கநிகர்வண்ணனை
யையனையருமைமதவேள், அநுதினமுமனதினினை தருமசதுரகிரிவளர
றப்பளீசுரதேவனே. ௧௬

வறுமையின்கொடுமை.

மேலானசாதியிலுதித்தாலுமதிலென்ன வெகுவித்தைகற்றுமெ
ன்ன, மிக்கவதிரூபமொடுசற்குணமிருந்தென்ன மிகுமானியாகிலென்ன
பாலனைமொழியுடையனாயென்ன வாசாரபரனாயிருந்துமென்ன, பார்
மீதுவீரமொடுஞானவானுமென்ன பாக்கியமிலாதபோது, வாலாயமாய்
ப்பெற்றதாயுஞ்சலித்திடுவாள்வந்த சுற்றமுமிகழுமே, மரியாதையில்
லாமலனைவரும்பேசுவார் மனைவியுந்தூறுசொல்வாள், ஆலாலமுண்டக
ணிவாயனை நேயனையனகனை னருமைமதவேள், அநுதினமுமனதி
னினை தருமசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௧௭

ஈனத்துவம்.

இரப்பவன்புவிமீதிலீனனவனுக்கில்லை யென்னுமவனவனுமீனன்,
ஈகின்றபேர்தம்மை யீயாமலேகலைத்திடுமூடனவனிலீனன், உரைக்கி
ன்றபேச்சிலே பலனுண்டெனக்காட்டி யுதவிடானவனிலீனன், உதவ
வேவாக்குரைத்தில்லையென்றேசொலுமுலுக்கனவனிலீனன், யிர
க்கின்றயாசகர்க்காசைவார்த்தைகள் சொல்லிபலகாலலைந்துதிரியப்பண்
ணியேயில்லையென்றிடுகொடியபாவியே பாரிலெல்லோர்க்குமீனன், அ
ரக்கிதழ்க்குமுதவாயுமை நேசனையெளியாமுதனே யருமைமதவேள்,
அநுதினமுமனதினினை தருமசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௧௮

மறைப்பனவும் வெளிப்படுத்துவனவும்.

சென்மித்தவருடமுண்டானவத்தமுந்தீதில்கிரகச்சாரமும்
தின்றுவருமௌஷதமுமேலானதேசிகன்செப்பியமகாமந்திரமும்
புன்மையவமானமுந்தானமும்பைம்புணர்புணைபடவார்கல்வியும்
புகழ்மேவுமானமுமிவையொன்பதுந்தனதுபுந்திக்குளேவைப்பதே
தன்மமென்றுரைசெய்வரொன்றோர்கருத்தையுந்தன்பிணியையும்பசி
யையும், தான்செய்தபாபமுமிவையெலாம் வேறொருவர்தஞ்செவியில்
வைப்பதியல்பாம். அன்மருவுகண்டனை மூன்றலரு மீன்றவுமையன்ப
னையருமைமதவேள், அநுதினமுமனதினினை தருமசதுரகிரிவளரறப்ப
ளீசுரதேவனே. ௧௯

தேவர்கள்காலவளவை.

சதுர்யுகமோரிரண்டாயிரம்பிற்படிற்சதுமுகற்கொருதினமதாம்
சாற்றுமித்தினமொன்றிலேயிந்திரபட்டங்கடாமுமீரேழ்சென்றிடும்
மதிமலியுமித்தொகையினயனுமுநூறுபோய்மாண்டபோதொருசற்பமா
ம், மாறிவருகற்பமொருகோடிசென்றனெடியமாலுக்கோர்தினமதாம்
ஆதிபரவுமித்தொகையிலொருகோடிநெடியமால்தோன்றியேபோய்மற
ந்தால், தோகையோர்பாகனேநீகத்தணிமுடிதுளக்கிடுங்காலமென்பார்

அதிகமுளபலதேவர்தேவனே தேவர்கட்கரசனே பருமைமதவேள் அறுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௪௰

தூய்மையிடமும் தூய்மைசெய்வனவும்.

வாம்பரிதனைக்கதிக புனிதமுகமதனிலேமறையவர்க்குயர் புனிதமோ, மலரடியிலேபுனிதமொளிதன் கண்ணுடிக்குமாசின்முற்புதனில் மேம்படும் பசுவினுக்குபிற்புறத்திலேமிக்கடமாதருக்கோ, மேனியெல்லாம்புனிதமோகுமாரசௌசமொடு மேவுவனிதையர்தமக்கும், காம்பிரமசுதற்குமிகுவெள்ளிவெண்கலமயக்கமுகமீபந்தமக்கும், தரும்புனிதமேவ புளிசுணஞ் சாம்பல்சாருமண்தாதுசாணம், ஆம்புனிதமிவை யென்பர் மாமேருவில்லிலேயனகனே பருமைமதவேள், அறுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௪௧

அடங்காதவற்றை அடக்குமுபாயம்.

கொடியவெபாலியெருமையிருமுங்கிலுங்கயிறென்றுகோர்த்துவசவிர்த்திக்கொள்வார், குவலயந்தனின்மதக்களிறதனையங்குசங்கொண்டுவசவிர்த்திக்கொள்வார், படிமீல்விஷவரவையந்திரதந்திரத்தினாற்பற்றிவசவிர்த்திக்கொள்வார், பாயபரியைநெடியகடிவாளமதுகொடுநடைபழக்கிவசவிர்த்திக்கொள்வார், இடமுடையதுஷ்டரைத்தோர்பந்துகைக்கொண்டுவிசிவசவிர்த்திகொள்வார், மிக்கபெரியோர்களுங் கோபத்தையறிவால்விலக்கிவசவிர்த்திகொள்வார், அடியவர்துதிக்க கமருசெந்தாமரைப்பதத்தையனேயருமைமதவேள், அறுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௪௨

ஒளியினுயர்வு.

செழுமணிக்கொளியதன் பட்டிலேயதினுமோ செய்யகச்சோதமெனவே, செப்பிடுங்கிருமிக்குமிச்சமொளியதனினுந் தீபத்தினொளியதிகமாம், பழுதிலாத்தீவட்டிதீபத்தினதிகமாம் பகல்வத்தியதிலதிகமாம், பரமத்தாப்பினொளியதிலதிகமதிலுமோபணிமதிக்கொளியதிகமாம், விழைவுதருயாதிக்குமனுநீதிமன்னர்க்குப்விரவிகாணிகருக்கும், மிக்கவொளிதிசைதொறும்போய்விளங்கிடுமென்னவிரகுளோருரைசெய்குவார், அழல்விழிகொடெரிசெய்து மதனவேடனைவென்றவண்ணலே யருமைமதவேள், அறுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௪௩

குணக்குற்றமாறல்.

வான்மதியைநோக்கிடிற் சோரர்காமுகருக்கு மாறுதவல்விஷமதாம், மகிழ்நன்றனைக் காணினமிலாவிபசரிய மாதருக்கோவிஷமதாம், மேன்மைதருநற்சுவைபதார்த்தமுஞ்சுரரோகமிக்கபேர்க்கதிகவிஷமாம், வித்தியாதிபர்தமைக்கண்டபோதிலோபவீணர்க்கெலாம் விஷமதாம், ஈனமிகுபுன்கவிவலோர்க்கதிக சபைகாணிலே லாதகொடியவிஷமதாம், ஏற்றமில்லாதபடுபாவிகட்குற மென்னிலென்ஞளுமதிகவிஷமதாம், ஆதவயோகியர்களிதயதாமரையுமன்னலே யருமைமதவேள், அறுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே.

உயர்வின்றி தாழ்வுசிறக்குமிடம்.

வெகுமானமாகிலுமவமானமாகிலு மேன்மையோர்செய்யி லழகாம்விரகமேயாகிலு சரசமேயாகிலும் விழைமங்கைசெய்யிலழகாம், தகுதாழ்வு வாழ்வு வந்ததருமங்களைச்செய்து சாரிலேபோழகதாம், சரீரத்திலேரூனமான வெகுவாகிலுஞ்சமர்செய்துவரிலழகதாம், நகமேவுமக்கரியிலேறினுங்கவரினுநாளுமந்நேரழகதாம், நாய்மீதிலேறினும் வீழினுங்கண்டபேர்நகைசெய்தழகன்றென்பர்காண், அகமாய நற்றவர்க்கருள் புரியுமையனேயாதியேயருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௨௫

நல்வினை செய்தோர்.

சறணைக்காத்தவன்மெய்யினால்வென்றவன் ஞானமிலையாதுத விநோன்தந்தைசொன்மறுதவன் முன்னவற்கானவன்றாய்பழிதுடைத்த நெடியோன்வருபிதிர்க்குதவிநோன்தெய்வமேதுணையென்றமைந்தன் மனைவியைவதைதநோன், மாறனதங்கையை நகைமையனைப்பிழைகண்டு மாயத்துலகின்மகிமை பெற்றோர்களருகரியசிபியரிச்சந்திரன்மாபலிகணிச்சிகோணசுமூத்திரைசுதன், கருடன்பகிரதனுடன்சிறத்தொண்டனொடுகானவன்பிரகலாதன், அரியவல்விபீஷணனுனு மாகாபுருஷராமதத்தனையருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௨௬

தீவினைசெய்தோர்.

வாயிகழ்வுபேசி மிகுவாழ்விழந்தோன் சிவனைவைதுதன்றலைபோயினோன்மற்றொருவர்தாரத்திலிச்சை வைத்துடலெலலாமாறுதவடுவாயினோன், தாயத்தினோர்க்குள்ள பங்கைக்கொடாடலே சம்பத்திழந்துமாய்ந்தோன், தக்கபெரியோர்த்தமைவணங்காமதத்தினாற்றந்திவடிவாயலைந்தோன், மாயனைச்சபைதனினிந்தனைசெய்தொளிகொனிவமணிமுடிதுணிந்துமாய்ந்தோன், வருகதுடனொடுதக்கன்பிராவகன் குருடன்மகன்வழுதிசிசுபாலனும், ஆயுமறுவாளனொடு தேவர்பணிதாளனே யவனிபுகழருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௨௭

நன்னகர்.

வாவிபலகூபமுடனாறருகுசேர்வதால்பலகாதவழியிலுளதாய், வாழைகமுகொடுதெங்குபயிராவதாய்ச்செந்நெல்வயில்கள் வாய்க்காலகளுளதாய் காவிகமலந்துவளைசேரியுள்ளதாய்க்கனவர்த்தசாண் மறையவலோர், காணரியாபலகுடிகணிறைவுள்ள தாய்நல்லகாவலனிருக்கையுளதாய்த்தேவராலயமாடல்பாடலணிமாளிகை சிறக்கவுளதாய்ச் சற்சனர்சேருமிடமாகுமோரூர்க்கிடைத்திலதிக சீவனமுமேகிடைத்தால் ஆவலோடிருந்திடுவதே சொர்க்கவாச மென்றறையலாமருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௨௮

தீநசர்.

ஈனசாதிகள்கூடியிருப்பதாய் முள்வேலியில்லினுக்குமுளதா ய்இணைமூலைதிறந்திருந்தலைவிரித்திடு மாதரொக்குநட மாட்டமுளதாய் கானமெகமாய்மலை யோரமாய்முறைபருக்காய்ச்சறப்பாத விடக்கமாய்க் கள்ளர்பயமாய் கொடியகயிறுட்டிறைக்கின்ற சற்சேணிநீருண்பதாய் மானமில்லாக்கொடிய துர்ச்சனர்தமக்கேற்றமணியமொன்றுண்டானதா ய், மாநிலத்தோர்தலமிருந்ததனில வெகுவாழ்வுவாழ்வதிலுமருநாகிலே ஆனைநெடுநாள்கிடந்தமிழ்தலேசுகமாகுமமலரணையருணைமமதவேள், அ னுதினமுமனதினிணை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௪௯

முழுக்குநாள்.

வருமாதிவாரங்கலைக்கெணையாகாதுவஷவமிகுவழகுபோகம்,வ ளர்திங்களுக்கதிகபொருள் சேருமங்காரவாரந்தனக்கிடர்வரும் திருமே புதனுக்குமிகுபுத்திவந்திடுஞ்செம்பொனுக்குயாறிவுபோய் தடியபொ ருட்சேதமாம் வெள்ளிசனியெண்ணெய் செல்வமுண்டாயுளுண்டாப்ப ரிகாரமுளதாதிவாரந்தனக்கலரி வௌமனுக்கானசெழுமண், பச்சறுகு பொன்னவற்காகமெருகதுனொளிப்பாற்கவற்காகுமெனவே, அறிதா வறிந்தமே ரெண்ணெய்சேர்த்தேமுழுக்காடுவாரருணைமமதவேள், அநுதி னமுமனதினிணை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௫௰

மருத்துவன்.

தாதுப்பரிசைக்ஷவருகாலதேசத்தோடுசரீரலட்சணமறிந்து
தன்வந்திரிகும்பமுனிநீசர்கொங்கணர்சித்தர்மதுவாகடமறிந்து
பேதப்பெருங்குளிகை சுத்திவகைமாத்திரைப் பிரயோகமோடுபஸ்பம்
பிழைபாதுமண்டூரசெந்தூரலட்சணம்பேர்பெருங்குணவாகடம்
சோதித்துமூலிகாவிதங்கண்டுங்கண்டுதாபனைதலம்லேகியம்
சொல்பக்குவங்கண்டுவருரோகந்திண்ணயந்தோற்றியேயமிர்தகரமாய்
ஆதிப்பெருஞ்சேழ்வியுடையனுயுயர்வேந்தனுக்குமமதருணைமமதவேள்
அனுதினமுமனதினிணைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௫௧

உண்மையுணர்க்குறி.

சோதிடம்பொய்யாதுமெய்யென்பதறிவரியசூழ்கிரகணஞ்சாக்ஷியாம்
சொற்பெரியவாகடம்நிசமென்கைபேதிதருதூயமாத்திரைசாக்ஷியாம்
ஆதியிற்செய்ததவமுண்டில்லையென்பதற்காளடிமையேசாக்ஷியாம்
அறிதேவதேவனெனபதையறியமுததூலரிச்சுவடியேசாக்ஷியாம்
நாதனேமாதேவனென்பதற்கோருத்ரநமகசமகஞ்சாக்ஷியாம்
நாயேனைரட்சிப்பதுன்பாரமறியவனுளுமர்ச்சனைசெய்சாணத்
தாதிநாயகன்மிக்கவேதனுயகனவன்னலேயருணைமமதவேள்
அநுதினமுமனதினிணைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௫௨

பிறவிக்குண மாறாமை,

கலங்காதசித்தமுஞ்செல்வமுஞ்ஞானமுங்கல்வியுஞ்சருணைவினையும்
கருதரியவடிவமும்போகமுந்தியானமுங்கனரூபமுளமங்கையும்
அலங்காரவீரமும்பொறுமையுந்தந்திரமுமாண்மையுமமுதமொழியும்
ஆணவிச்செயலெலாஞ்சனனவாசனையினலாகிவருமன்றிநிலமேல்
நலஞ்சேருமொருவரைப்பார்த்துப்பெறக்கருதினனுமோரஸ்காளித
நற்சுவைதனக்குவரவேம்புவுமோகோடிநாள்செயினும்வாராதுகாண்
அலங்காரமாகமலர்கொன்றைமாலிகைசூடுமண்ணலேயருமைமதவேள்
அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௫௨

ஊழ்வலி,

கடலளவுரைத்திடுவார்பிரமருகருமுங்காணும்படிக்குரைசெய்வார்
கசினியினளவுபிரமணமாகச்சொல்வார்சாயகதிநிலைமையறிவார்
விடலரியசிவனிலைகாட்டுவார்மூச்சையும்விடாமற்றடுத்தடக்கி
மேன்மேலும்யோகசாதனைவிளைப்பரொட்டிவிண்மீதிலுந்தாவுவார்
தொடவரியபிரமகலைகாட்டுவாரெண்வகைத்தொகையானசித்தியறிவார்
சூழ்வினைவரும்பொழுதசிக்கியுழல்வாரதுதடைக்கவொருநான்முதற்
அடைவலவெனத்தெரிந்தளவிலபலநூல்சொல்லுமண்ணலேயருமைம
தவேள்,அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே.

ஒப்புயர்வில்லாமை,

வேதியர்க்கதிகயாஞ்சாதியுங்கனகமகமேருவுக்கதிகமலையும், வெண்டிரைகொழித்துவருகங்காநதிக்கதிகமேதினியிலோடுநதியும், சோதிதருமாதவர்க்கதிகமாங்காந்தியுஞ்சூழ்கனற்கதிகசுசியும், தாய்தந்தைக்குமேலானதெய்வமுஞ்சுருதிக்குயர்ந்தகலையும், ஆதிவடமொழிதனக்கதிகமாமொழியுமன்னதானந்தனிலுமோர், அதிகதானமுமில்லையென்றுபலநூலெலாமாராய்ந்துரைசெய்வார், ஆதவன்பிரமன்விண்ணவர்முனிவர்பரவவருமண்ணலேயருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே, ௫௫

வீண்செயல்.

வேட்டகஞ்சேர்வோரும்வீணரேவீணுரைவிரும்புவோரவரின், வீணர்விருந்திகண்டிலலாடனக்கஞ்சியேடிமறைவிரகிலோரவரின்வீணர், நாட்டத்தருங்கல்வியிலரோரும்வீணரேநாடியவர்மேற்கவிசொல்வார், நாணிலத்தனில்வீணரவரினும்வீணரோநாரைச்சுமக்குமெளியோர், தேட்டறிவிலாதபொருவீணர்தாயவரினுஞ்சேரொருவர்த்துமின்றிச்செலவுசெயவோரதிகவீணராம்வீணருய்த்திரியுமெளியேனையாட்கொண்டாட்டஞ், செயிம்பசாம்புயமுடியின்மேல்வைத்தவபலனேயருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே,

உதவியின்றிக் கெடுவன,

மூப்பொருவரில்லாத குமரிகுடிவாழ்க்கையு மூதரணிலாத நகரும், மொழியும்வெகுநாயகஞ்சேரிடமும்வருமெதுகை மோனையில்லாதகவியும், காப்பமைவிலாததோர் நந்தவனமும்நல்ல கரையிலாநிறையேரியும், கசடறக்கற்காத வித்தையுமுபதேசகாரணமிலாததெளிவும் கோப்புளவிநோதமுடை யோரருகுபுகழாத கோதையர்செய்கூத்தாட்டமும், குளிர்புனனிறைந்துவரு மாற்றோரமதினின்றுகோடுயர்ந்தோங்குதருவும், ஆப்பதில்லாததே ரிவையெலாமொன்றுகுமையனேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே, ௫௭

இவையேபோதுமெனல்

பொய்யாதவாய்மையுஞ் சீலமுஞ்சார்ந்துளோர் பூவலஞ்செயவேண்டுமோ, பொல்லாதகொலைகளவி லாதநன்னெறியுளோர் புகழறஞ்செயவேண்டுமோ, நையாதகாமத்தை லோபத்தைவிட்டபேர் நல்லறஞ்செயவேண்டுமோ, நன்மனோசுத்தியுண் டானபேர்மேலுமொரு நதிபடிந்திடவேண்டுமோ, மெய்யாநினடியரைப் பரவுவோருன்பதம் விரும்பிவழிபடவேண்டுமோ, வேதியர்தமைப்பூசை பண்ணுவோர் வானவரை வேண்டியர்ச்சனைசெய்வரோ, ஐயாறுடன்கமலை சோணாசலந்தில்லை யதிபனேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௫௮

அரியராவோர்.

பதின்மதிலொருத்தர்சபை மெச்சிடப்பேசுவோர் பாடுவோர்நூற்றிலொருவர், பார்மீதிலாயிரத் தொருவர்விதிதப்பாது பாடிப்பிரசங்கமிடுவோர், இதனருமையறிகுவோர் பதினாயிரத்தொருவ ரிதையறிந்திதயமகிழ்வால், ஈகின்றபேர்புவியி லேயருமையாகவே இலட்சத்திலேயொருவராம், துதிபெருகவருமூன்று காலமுமறிந்தமெய்த் தூயர்கோடியிலொருவராம், தொல்லுலகுபுகழ்காசி யேகாம்பரங்கைலை சூழுமவனாசிபேரூர், அதிகமுளவெண்காடு செங்காடுகாளத்தி யத்தனேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௫௯

கற்புமேம்பாடு.

தன்கணவனுருவமாய்த் தற்புணரவந்தோன் றனக்கிணங்காதநிறையாள், தழற்கதிரெழாமலும் பொழுதுவிடியாமலுஞ் சாபங்கொடுத்தசெயலாள், மன்னிவளராழன்மூழ்கி யுலகறியவேதனைந்து மகிழ்நனைச்சேர்ந்துபரிவாள், மைந்தனைச்சுடவந்தவிறைவன் றடிந்தவடிவாண்மாலையானகனிவாள், நன்னதிபடிந்திடுவதென்னவாரதன்மூழ்கிநாயகனைமேவுதயவாள், நானிலம்புகழ்சாலி பேர்பெறுநளாயினிநளினமலர்மே

ல்லைவதேகி, அன்னமெனவருசந்த்ர மதிதுரௌபதியென்பராதியே யருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீ சுரதேவனே, கூ௰

கோடியுடுக்குநாள்.

கறைபடாதொளிசேரு மாதிவாரந்தனிற் கட்டலாம்புதியசீலை, கலைமதிக்காகாது பலபாலுமழையினிற் கடிதுநனை வுற்றெழிதரும், குறைபடாதிடர்வரும் வீரியம்போமரிய குருதிவாரந்தனக்குக், கொஞ்சநாளிற்கிழியும் வெற்றிபோம்புந்தியிற் குருவாரமதிலணிந்தால், மறைபடாதழகுண்டு மேன்மேலுநல்லாடை வருமினியசுக்கிரற்கோ, வாழ்வுண்டுதிருவுண்டு பொல்லாதசனியற்கு வாழ்வுபோ மரணமுண்டாம் அறைகின்றவேதாகமத்தின்வடிவாய்விளங் கமலனேயருமை மதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே()

சகுனம்.

சொல்லரியகருடன்வா னரமரவமூஞ்சூறு சூகரங்கிரிகலைமான், துய்யபாரத்வாச மட்டையெலிபுன்கூகை சொற்பெருகமருவுமாந்தை வெல்லரியகரடிகாட் டான்பூனைபுலிமேல் விளங்குமிருநாவுடும்பு, மிகவுரைசெயிவையெலாம் வலமிருந்திடமாகில் வெற்றியுண் டதிகநலமாம், ஒல்லையில்வழிப்பயண மாகுமவர்தலைதாக்க லொருதுடை யிருத்தல்பற்றல், ஒருதும்மலாணையிட லிருமல்போகேலென்ன லுபசுருதி சொல்லிவையெலாம், அல்லறருநல்லவல வென்பர்முதி யோர்பரவுமலனேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. கூஉ

இதுவுமது.

நரிமயில்பசுங்கிள்ளை கோழிகொக் கொடுகாக்கை நாவிசிச்சிலி யோந்திதான், நரையான்கடுத்தவாய் செம்போத்துடன்மேதி நாடரிய சுரபிமறையோர், வரியுழுவைமுயலிவை யனைத்தும்வலமாயிடின்வழிப்பயணமாகைநன்றாம், மற்றுமிவையன்றியே குதிரையனுமானித்தல் வாய்ச்சொல்வவாவென்றிடல், தருவளைதொனித்திடுதல் கொம்புகிடுமுடிமுரசு தப்பட்டையொலிவல்வேட்டுத், தனிமணிமுழக்கெழுதலிவையெலாமூர்வழி தனக்கேகநன்மையென்பார், அருணகிர ணத்தையத் தருணபானுவையனைய வண்ணலேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. கூங

இதுவுமது.

தலைவிரித்தெதிர்வருத லொற்றைப்பிராமணன் றவசிசன்னாசி தட்டான், தனமிலாவெறுமார்பி மூக்கறைபுல்விறகுதலை தட்டைமுடிமொட்டைத்தலை, கலன்கழிமடந்தையர்கு சக்கலஞ்செக்கான் கதித்ததிதைலமிவைகள், காணவெதிர்வரவொண்ணா நீர்க்குடமெருக்கூடைகறிபுலாலுபயமறையோர், நலமிகுசுமங்கலை கிழங்குருதகமங்கை நாளும்

வெண்ணாணழுக்கு, நசைபெருகுபாற்கலசமணிவளையன் மலரிவைகளு
டியெதிர்வரநன்மையாம், அலைகொண்டகங்கைபுனை வேணியாய் பர
சணியுமண்ணலே யருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசது
ரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௬௪

உணவில்விலக்கு.

கைவிலக்குக்கொளும் பாலசப்பால்வருங்காராக்கறந்தவெண்பா
ல், காளான்முருங்கைசுரை கொம்மடிபழஞ்சோறுகாந்திக்கரிந்தசோ
று, செவ்வையில்சிறுக்கீரை பீர்க்கத்திவெள்ளுப்பு தென்னைவெல் லம
லாவகம், சீரிலாவெள்ளுள்ளி யீருள்ளியிங்குவொடு சிறப்பில் வெண்
கத்திரிக்காய், எவ்வமில்சிவன்கோயி னிர்மாலியங்கிரண மிலகுசுடரி
ல்லாதவூண், இவையெலாஞ்சீலமுடையோர்களுக்காகா வெனப்பழை
யநூலுரைசெயும், ஐவகைப்புலன்வென்ற முனிவர்விண் ணவர்போற்
றுமமலனேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவ
ளரறப்பளீசுரதேவனே. ௬௫

நற்பொருளிற்குற்றம்.

பேரானகங்கா நதிக்குமதன்மேல்வரும் பேனமேதோஷமாகும்
பெருகிவளர்வெண்மதிக் குள்ளுட்கலங்கமே பெரிதானதோஷமாகும்
சீராந்தபோதனர்க்கொருவர்மேல்வருகின்ற சீற்றமேதோஷமாகும்,தீ
தின்முடிமன்னவர் விசாரித்திடாதொன்றுசெய்வதவர்மேற்றோஷமா
ம்,தாராளமாமிகத்தந்துளோர்தாராமை தானிரப்போர் தோஷமாம்,
சாரமுளநற்கருப்பஞ்சாறுகைப்பதவர் தாலஞ்செய்தோஷமாகும், ஆ
ராயுமொருநான் மறைக்குமெட்டாதொளிரு மண்ணலே யருமைமத
வேள்,அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே

மனைகோல்வதற்குமாதம்.

சித்திரைத்திங்கடனின் மனைகோலமனைபுகச்செல்வமுண்டதிலு
னலமே, சேரும்வைகாசிக்கு மேனுளரண்புரந்தீயிட்டதாணியாகா,வெ
ற்றிகொளிராகவன் றேவிசிறைசேர்கடகம்வீறல்லவாவணிகம்,மேவி
டுங்கன்னியிர ணியன்மாண்டதாகாது மேன்மையுண் டைப்பசிக்கே
உத்தமங்கார்த்திகைக் காகாதுமார்கழியி லோங்குபாரதம்வந்தநாள்,உ
யர்வுண்டுமகரத்தின் மாசிமாதத்திலவிட மும்பர்கோனுண்டதாகா, த
த்தநீசாரனை யெரித்தபங்குனிதானு மாகுமோவருமைமதவேள்,அநு
தினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௬௭

விருந்து வாரம்.

செங்கதிர்க்குரவுபோம் பகைவரும்விருந்தொருவர் செய்யொணா
துண்ணொணாது, திங்களுக்குறவுண்டு நன்மையாம்பகைவருஞ் செவ்
வாய்விருந்தருந்தார், பொங்குபுதனன்மையுண் டெலாம் விருந்துணப்

பொன்னவற் கதிகபகையாம், புகரவற்காகிலோ நெடுநாள்விரோதமா
ய்ப் போனவுரவுந்திரும்பும், மங்குலிகர்சனிவார நல்லதாமிதனினும
னமொத்திருந்தவிடமே, வாலாயமாய்ப்போய் விருந்துணவிருந்துதவ
வாய்த்தநாளென்றறியலாம், அங்கையில்விளங்கிவளர் தங்கமழுவால
னேயண்ணலே யருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகி
ரிவள ரறப்பளீசுரதேவனே. ௬௮

பூப்புவாரம்.

அருக்கனுக்கதிரோகி யாவணற்சோமனுக் காணகற்புடையளாவ
ள், அங்காரகற்குவெகு துக்கியாவாள்புந்தி யளவில்லைபங்குழவிபெறு
வாள், திருத்தகுவியாழத்தின் மிக்கசம்பத்தினொடு சிறுவரைப் பெற்
றெடுப்பாள், சிருடையபார்க்கவற் கதிபோகவதியுமாந் திருவுமுண்டா
யிருப்பாள், கருத்தழிந்தெழில்குன்றி வறுமைகொண்டலைகுவாள் கா
ரிவாரத்திலாகில், களபமுலைமடமாதர் புஷ்பவதியாம்வார காலபல
னென்றுரைசெய்வார், அருந்தியுடனெளியேனை யாட்கொண்ட சோ
தியேயண்ணலே யருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுர
கிரிவள ரறப்பளீசுரதேவனே, ௬௯

பூப்புலக்கினம்.

வருமைதப்பாதுவரு மேடத்திலிடபத்தின்மாறுதுவிபசாரியாம்
வாழ்வுண்டுபோகமுண் டாகுமிதுனங்கடகம் வலிதினிற்பிறரையணை
வாள், சிறுமைசெயுமிடிசேர்வண் மிருகேந்திரர்க்கேனிற் சீர்பெருவள்
கன்னியென்னில், செட்டுடையடுலையெனியிற்பிணியாண்மெலிந்திடுவ
டேளினுக்குத்தனிசெனில், நெறிசிதைவன்பூருவத்தபரநெறியுடையளா
நீண்மகரமானமிவளாம், நிறைபோகவதிகும்ப மெனின்மீன மென்னி
லோ நெடியபேரறிவுடையளாம், அறிவாளர்மடமாதர் தமையறியிரா
சிபல னதுவென்பருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுர
கிரிவள ரறப்பளீசுரதேவனே. ௭௰

தீவுங்கடலும்.

நாவலந்தீவினைச் சூழ்கருங்கடலளவு லட்சம்யோசனை யிதனையே
நாடொறுஞ்சூழ்வதில் வந்திதவதைச்சூழ தனற்கழைச்சாற்றின்கடல்
மேவுமிதுசூழ்வதில் குசத்திவதைச்சூழ்தன் மிகுமதுக்கடலனையே,வி
ழைவொடுஞ்சூழ்தல்கிர வுஞ்சதீவும்தனிற் மேற்சூழ்தனெய்கடலதாம்
பூவிலிதுசூழ்தல்சா கத்தீவுமிங்கிதைப் போர்ப்பது திருப்பாற்கடல்,
போதலதுசூழ்தல்சான் மலிதீவுமாந்தயிர்ப் புணரியப்யாலுமப்பால்,ஆ
வலுறுபுட்கரத் தீவாமிதழ்ச்சூவ தரும்புனற்றருமைமதவேள், அநுதி
னமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௭௧

மேலானபொருள்கள்.

சுழிசுத்தமாயிருந் ததிலும்படைக்கான துரகமோர் மாணிக்கமா
ம்;சூழ்புவிக்கரசனுயதிலேவிவேகமுள துரையுமோர் மாணிக்கமாம்,

ழுதற்றவதிருப வதியுமாய்கற்புடைய பாவையோர் மாணிக்கமாம்,ப
லைகலைகள்கற்றறி யடக்கமுளபாவலன்பார்க்கிலோர்மாணிக்கமாம்,ஒழி
வற்றசெல்வனாயதிலேதியாகியாய்முசித்தனோர்மாணிக்கமாம்,உத்தமகு
லத்துதித் ததிலுமோமெய்ஞ்ஞான முடையனோர் மாணிக்கமாம், அறி
வற்றவேதாக மத்தின்வடிவாம்விலங் கமலனேயருமைமதவேள்,அனு
தினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. எஉ

உண்டியிலையும் முறையும்

வாழையிலைபுன்னைபுர சுடனற்குருக்கத்தி மாப்பலாத் தெங்குபன்
னீர்,மாசிலமுதுண்ணலாமுண்ணாதவோ வரசுவணசஞ்செழும்பாடலாம்
தாழையிலையத்தியா லேரண்டபத்திரஞ் சகதேவமுமுண்ணருக்கூச், சா
ருமிலைவயன்றிவெண் பாலெருக்கிச்சிலிலை தனினுமுண்டிட வொணா
தால், தாழ்விலாச்சிற்றுண்டி நீரடிக்கடி பருகல் சாதங்கள்பலவருந்தல்
சற்றுண்டன்மெத்தவுணித்தனையுமெய்ப்பிணி தனக்கிடமெனப்பருகி
டார், ஆழிபுடைசூழுலகில் வேளாளர்குலதிலக னாகுமெமதருமைமத
வேள்,அனுதினமுமனதினினைதருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே

கவிஞர்வறுமை.

எழுதப்படிக்கவகை தெரியாதமூடனை யிணையிலாச் சேஷனென்
றும், ஈவதில்லாதகன லோபியைச்சபையதனி லிணையிலாக்கர்ணனெ
ன்றும், அழகற்றவெகுகோர ரூபத்தையுடையோனை யதிவடிவ மார
னென்றும், ஆயுதமெடுக்கவுந் தெரியாதபேடிதனை யாண்மைமிகுவிஜ
யனென்றும், முழுவதும்பொய்சொல்லி யலைகின்றவஞ்சகனை மொழி
யரிச்சந்த்ரனென்றும், மூதுலகிலிவ்வணஞ்சொல்லியே கவிராஜர்மு
றையின்றியேற்பதென்னோ, அழலெனவுதித்தவரு விஷமுண்டகண்ட
னேயமலனேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகி
ரிவள ரறப்பளீசுரதேவனே. எ௩

கவிஞன்.

தெள்ளமிர்ததாரையென மதுரங்கதித்தபைந் தேன்மடை திறந்
ததெனவே, செப்புமுத்தமிழினொடு நாற்கவிதைநாற்பொரு டெரிந்து
ரைசெய் திறமையுடனே, விள்ளரியகாவியத்துட்பொருளலங்காரம்வி
ரியிலக்கணவிகற்பம், வேறுமுளதொன்னூல் வழக்குமுல கத்தியல்பு
மிக்கப்ரபந்தவண்மை, உள்ளமெல்லாமறிந் தலையடங்குங்கடலை யொ
த்ததிகசபைகண்டபோ, தோங்கலையொலிக்கின்ற கடல்போற்ப்ரசங்க
மதுரைப் வன் கவிஞனாகும், அள்ளிவிஷமுண்டகனி வாயனே நேய
னேயமலனேயருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரி
வள ரறப்பளீசுரதேவனே. எ௪

நற்சார்பு.

காணரியபெரியோர்கடெரிசனம்லபிப்பதே கண்ணிணைகள்செய்
புண்ணியம், கருணையாயவர்சொன்மொழி கேட்டிடலபிப்பதிரு காது

செய்திடுபுண்ணியம், பேணியவர்புகழையே துதிசெய லபித்திடுதல் பேசில்வாய்செய்புண்ணியம், பிழையாமலவர்தமைத்தொழுகிடலபிப்பதுகை பெரிதுசெய்திடுபுண்ணியம், வீணெறிசெலாமலவர் பணிவிடைலபிப்பதுன் மேனிசெய்திடுபுண்ணியம், விழைவொடவர்சொற்படி நடந்திடலபிப்பதே மிக்கபூருவபுண்ணியம், ஆணவமெனுங்களைகளைந்தறிவினைத்தந்த வண்ணலையருமைமதவேள், அநுதினமு மனதினிணைதருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௭௬

பிறந்தநாளோடுவருகிறவாரபலம்.

சென்மநக்ஷத்திரத் தாதிவாரம்வரிற் றீராதலைச்சலுண்டாம், திங்களுக்காகில்வெகு சுகபோசனத்தினொடு திருமாதி னருளுமுண்டாம், வன்மைதருமங்கார வாரம்வந்தாற்சிறிதும் வாராதுசுகம தென்பார், மாசில்பலகலைபயில்வர் மேன்மையாமபுந்தியெனும்வாரத்துடன்கூடினால், நன்மைதருகுருவார மதுசேர்ந்துவரிலாடை நன்மையுடனேவந்திடும், நாரியருடன்போக மிகவுமுண்டொருவெள்ளி நல்லவாரத்தில்வந்தால், அன்மருவுபீடையுண்டாமென்பர்சநியனுக்கமலனேயருமைமதவேள், அநுதினமுமனதினிணை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௭௭

இதனையுடையவர்க்கு இதுவில்லையெனல்.

பொன்னாசையுள்ளவர்க் குறவேது குருவேது பொங்குபசியுள்ளபேர்க்குப், போதவேசுசியேது ருசியேதுமயல்கொண்டு பொதுமாதர்விழிவலையிலே, எந்நாளுமலைபவர்க்கச்சமொடுவெட்கமே தென்றெண்ணுமுழுகல்விமேல் இச்சையுளபேர்க்கதிக சுகமேது துயிலேது வெளிதாயிருந்துகொண்டே, பன்னாளுமலைபவர்க் கிகழேது புகழேது பாரிலொருவர்க்கதிகமே, பண்ணியிடுமூடருக் கறமேதுமறமலாற் பகர்விறையமொன்றுளதுகாண், அன்னவருகரி யுரித்தணியுமெய்யனேயமலனே யருமைமதவேள், அநுதினமுமனதினிணை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௭௮

மழைநாட்குறிப்பு.

சித்திரைதிங்கள்பதின் மூன்றுக்குமேனல்ல சிராணபரணிமழையும், தீதில்வைகாசியிற் பூரணைகழித்தபின் சேருநாலாநாளினில, ஒத்துவருமழையுமவ்வாணியிற் றேய்பிறையி லோங்குமேகாதசியினில், ஒளிர்பரிதிவீழ்பொழுதின் மந்தாரமும்மழையு முண்டாயிருந்தாடியில, பத்திவருதேதியைந் தினிலாதிவாரமும பகருமாபணி மூலநாள், பரிதியுமறைந்திடக் கனமழைபொழிந்திடப்பாரில்வெகுவிளைவுமுண்டாம்

அத்தனேபைங்குவளை மாலையணிமார்பனு மண்ணலேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே,()

இருந்துமுதவாமை.

சமயத்திலுதவாத நிதியமேன்மிக்கதுயர் சார்பொழுதுதவா தகிளையேன், சபைமுகத்துதவாத கல்வியேனெதிருவரு சமயத்திலாதபடையேன், விமலனுக்குதவாத பூசையேனனுமிருள் வேளைக்கிலாத சுடரேன், வெம்பசிக்குதவாத வன்னமேனீக்குளிர் வேலைக்கிலாதசலையேன், தமதுதளர்வேளைக் கிலாதவோர்மனைவியேன் சரசத்திலாத நகையேன், சாமரணகாலத்தி லுதவாதபுதல்வனென் றாணிமேதென்பர்சண்டாய், அமரர்க்குமுனிவர்க்கு மொருவர்க்குமெட்டாத வாதியேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே ௮௰

மறையோர்சிறப்பு.

ஓராறுதொழிலையுங் கைவிடார்சௌசவிதியொன்றுதப்பாதுபுரிவார், உதயாதியிற்சென்று நீர்படிகுவார்கால மொருமூன்றினுக்கு மறவார், தாராந்துகாயத்திரி யதுசெபிப்பார்நாளு மதிதிபூசைகள்பண்ணுவார், யாகாதிகருமங்கள்மந்த்ரகிரியாலோப மின்றியேசெய்துவருவார், பேராசைகொண்டிடார் வைதிகநன்மார்க்கமே பிழையாதிருக்குமறையோர், பெய்யெனப்பெய்யுமுகி லவர்மகிமையெவர்களும் பேசுதற்கரிதரிதுகாண், ஆரார்நெகிஞ்சடில வமலனேயெனையாளு மண்ணலேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே ௮௧

அரசர்சிறப்பு.

மநுநீதிமுறைமையும் பராசர்கொண்டாட வருமதிகாணவீரமும், வான்விஜயமொடுசரச சாதனவிசேஷமும் வாசிமதகரியேற்றமும், கனமாமமைச்சரும் பலமானதுர்க்கமுங் கைகண்டபோர்ப்படைஞரும், கஜரதபதாதியுந் துரகப்ரவாகமுங் காலதேசங்களெவையும், இனிதாயறிந்தஸ்தா னபதிகளொடுசமர்க் கிளையாததளகர்த்தரும், என்றும் வற்றாததன தானியசமுத்திரமு மேற்றமுளகுடிவர்க்கமும், அனைவோருமெச்சவிங் கிவையெலாமுடையபே ரரசராமருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௮௨

வைசியர்சிறப்பு

நீள்கடல்கடந்திடுவர் மலையாளமும்போவர்நெடிதூதூரந்திரிந்து நினைவுதடுமாறார்கள் சலியார்கள்பொருள்தேடி நீணிலத் தாசுபுரியும், வாணுழவரைத்தமது கைவசஞ்செய்வார்கள் வருமிடம் வராதவிடமும், மனதையுமறிந்துதவி யொன்றுநூறாயிட வளர்ப்பவரு துலைதுலைக்

கும், ஆள்விடுவர்மலிவுகுறை வதுவிசாரித்திடுவ ரளவில் பற்பலசரக்கும், அமைவுறக்கொள்வர்விற் பார்கணக்கதிலனுவு மறவிடார் செலவுவரிலோ, ஆளியொத்தேமலையி னளவுங்கொடுத்திடுவ ரருள்வசிய ருமைமதவேள், அனுதினமுமனதினினைதருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. அரு

வேளாளர்சிறப்பு.

யாகாதிகருமமுந் தப்பாமல்வேதிய ரியற்றிநல்லோர்பெறுவதும் இராச்சியபாரஞ்செய்து முடிமன்னர்வெற்றிகொண் டென்றுநல்லோர்பெறுவதும், வசனாதிதப்பாது தனதானியந்தேடி வசியர்நல்லோர்பெறுவதும், மற்றுமுளபேரெலா மிடியென்றிடாததிக வளமைபெற்றேர்பெறுவதும், திசைதோறுமுள்ளபல தேவாலயம்பூசை செய்யனல்லோர்பெறுவதும், சீர்கொண்டபைங்குவளை மாலைபுனைவேளாளர் செய்யுமேழிப்பெருமைகாண், அசையாதுவெள்ளிமலை தனின்மேவி வாழ்கின்ற வண்ணலேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. அச

தானாதிபதிமந்திரி சேனாதிபதிகளினியல்பு.

தன்னரசர்வலுமையும் பராரசரெண்ணமுஞ் சாலமேல்வருகருமமும், தானறிந்ததிபுத்தி யுத்தியுண்டாயினோன் றானாதி பதியாகுவான், மன்னவர்மனத்தையுங் காலதேசத்தையும் வாழ்குடி படைத்திறமையும், மந்திராலோசனையு மெல்லாமறிந்தவன் வளமானமதிமந்திரி துன்னியபடைக்குணங் கரிபரிபரிசைஷயே சூழ்பகைவர் புரிசூழ்ச்சியும், தோலாதவெற்றியுந் திடமானசித்தியுள சூரனேசேனாதிபன், அன்னையிலுநல்லமலை மங்கைபங்காளனே யனகனே யருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே அடு

இராயசகாரணீகர்சிறப்பு.

வருமோலையுத்தரத் தெழுதிவரு பொருளினால் வரவிடுப்போன் மனதையும், மருவிவருகருமமுந் தேசகாலத்தையும் வாகரதலாமலகமா, வினாவாயறிந்தரச ரெண்ணிலெண்ணினையள விடவெழுதவாசிக்கவும்,வெற்றிகொண்டேபெரியபுத்தியுடையோன்புவியின்மேன்மை ராயசகாரனும், கறுவாயறுந்துதொகை யீராறுநொடியினிற் கடிதேற்றிடக்குறைக்கக், கடுகையொருமலையாக்க மலையையொருகடுகுமாக்காட்டுவோன்கருணீகனும், அருவாகியுருவாகி யொளியாகிவெளியாகும ண்ணலேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. அசா

கோபத்தின்கொடுமை.

கோபமேபாவங் களுக்கெலாந்தாய்தந்தை கோபமே குடிகெடுக்கும், கோபமேயொன்றையுங்கூடிவரவொட்டாதுகோபமேதுயர்கொடுக்க்

டுக்கும், கோபமேபொல்லாது கோபமேசீர்கேடு கோபமேயுறவறுக்கும், கோபமேபழிசெயுங் கோபமேபகையாளி கோபமேகருணைபோக்கும், கோபமேயீனமாங் கோபமேயெவையுங்கூடாம லொருவனுக்கும், கோபமேமறலிமுன் கொண்டுபோய்த்தீய நரகக்குழியினிற்றள்ளுநாள் ஆபத்தெலாந்தவிர்த்தென்னை யாட்கொண்டருளுமண்ணலே யருமை மதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௮௭

பலதுறை.

தான்புரிதவத்தையுங் கொடையையும் புகழுவோர் தங்களுக்கவைதழைவுறா, சற்றுமறிவில்லாமலந்தணரைநிந்தனைசெய் தயவிலோராயுள்பெருகார், மேன்படுநறுங்கலவை மாலைதயிர்பால்புலால்வீடுநற்செந்நெலிவைகள், வேறொருவர் தந்திடினு மநுமொழியறிந்த பேர்விலைகொடுத்தேகொள்ளுவார், தேன்கனிகிழங்கு விறகிலையிவையனைத்தையுந் தீண்டரியநீசரெனினும், சீர்பெறவளிப்பரோளி கழாதுகைக்கொள்வர் சீலமுடையோரென்பரால், ஆன்கொடியுயர்த்தவுமை நேசனேயீசனே யண்ணலேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௮௮

தத்துவத்திரயம்.

பூதமோரைந்துடன் புலனைந்துஞானம் பொருந்துமிந்திரியமைந்து, பொருவில்கன்மேந்திரிய மைந்துமன மாதியாம்புகலரிய கரணநான்கே, ஓதிநேரிவையாத்ம தத்துவமெனச்சொல்வருயர்காலநியதிகலையோ, டோங்கிவருவித்தைராகம் புருடன்மாயையென் றுரைசெயுமோரேழுமே, தீதில்வித்யாதத்துவ மென்றிடுவரிவையலாற்றிகழ்சுத்தவித்தையீசன், சீர்கொள்சாதாக்கியஞ் சத்திசிவமைந்துமே சிவதத்துவமென்றறைகுவார், ஆதிவடநீழலிற் கனகாதியற்கருள்செய்யண்ணலே யருமைமதவேள், அநுதினமுமனதினினை தருச[illegible]கிரிவள ரறப்பளீசுரதேவனே. ௮௯

மன்மதபாணமும் அவற்றின்குணமுதலியவும்.

வனசஞ்சூதமுடனசோகந்தவளமலர்நீலமிவையைந்துமே, மாரவேள்கணைகளாமிவைசெயுங் குணமுளரிமனதிலாசையையெழுப்பும், வினவிலொண்சூதமலர்மெய்பசலையுண்டாக்குமிகவசோகந்துயர்செயும், நினைவிலதுவேநோக்கம்வேறொன்றிலாசையற நெட்டுயிர்ப் பொடுபிதற்றல், நெஞ்சந்திடுக்கிடுதல மனம் வெறுத்திடல் காய்ச்சனோர்தன்மௌனம்புரிகுதல், அனையவுயிருண்டில்லையென்னலீரைந்துமாமத்தனேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௯௰

மன்மதனுபகரணங்கள்.

வெஞ்சிலைசெழுங்கழைவிளரிகருவண்டினமேல் விடுங்கணைகளலராம், வீசிடுந்தென்றல்தேர் பைங்கிள்ளையேபரிகள் வேழங்கெடாதவிருளாம், வஞ்சியர்பெருஞ்சேனைகைதையுடைவாணெடிய வண்மைபெறுகடன்முரசமாம், மகரம்பதாகை வருகேகிலங்காகளம் மனதேபெரும்போர்க்களம், சஞ்சரிகைவிசைபாடல்குமுதநேயன் கவிகைசாரிதியேமனைவியாம், தறுகண்மடமாதரிளமுலைமகுடமாமல்குறவுறுதிருக்குமிடமாம், அஞ்சுகணைமாரவேட்கென்பரெளியோர்க்கெலாமமுதமேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௯௧

பகைகொளத்தகாதவர்.

மன்னவரமைச்சர்துர்ச்சனர் தூதரொடுமொருத மர்மமுடையோர், வலுவர்காணிகர்மிக்குபகாரஞ் செய்தன்னமிடுமடையர்மந்திரவாதியர், சொன்னமுடையோர்புலையருபதேசமதுசெய்வோர்சூழ்வயித்தியர்கவிதைகள், சொற்றிடும் புலவரிலர் பதினைந்துபேரொடுஞ்சொற்பனந் தனிலாகிலும், நன்னெறியறிந்தபேர் பகைசெய்திடார்களிந்நானிலத்தென்பர்கண்டாய், நாரியோர்பாகனே வேதாகமம்பந்வு நம்பனேயன்பர்நிதியே, அன்னமூர்பிரமனுங் கண்ணனுங்காணாத வண்ணலேயருமைமதவேள், அநுதினமு மனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. ௯௨

இதாகிதஞ்செய்து பயன்கொள்வன.

சுவைசேர்கரும்பைவெண் பாலைப்பருத்தியைச்சொல்லுநன்னெல்லையென்னைத், தூயதெங்கின்கனியை யெண்ணுதுட்டரைத் தொண்டரைத் தொழுதொழும்பை, நவைதீருமாறுகண் டித்தேபயன்கொள்வர் நற்றமிழ்க் கவிவாணரை, நலமிக்கசெழுமலரை யோவியமெனத்தக்க நயமுள்ள நாரியர்தமைப், புவிமீதிலுபகார நெஞ்சுரைச்சிறுவரைப் போர்வீரரைத் தூயரைப், போதவும்பரிவோடி தஞ்செய்ய மிகுபயன்புகழ்பெறக்கொள்வர்கண்டாய், அவமதிதவிர்த்தென்னை யாட்கொண்டவள்ளலே யண்ணலேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே ௯௩

தருமம்.

பெறுமில்பெறுவித்தலொடு நாளோலைநாடொறும் பிள்ளைகளருந்திடும்பால்; பேசரியசத்திர மடவாவுரிஞ்சுநல் பெண்போகநாவிதன் வண்ணான், மறைமொழிகணுடி தண்ணீர்தலைக்கெண்ணைபசு வாயினுறைபிணமடக்கல், வாவிபிருமுயிர்மீட்ட நின்பொருளடைக்காய்வழங்கல் சுண்ணும்புதவுதல், சிறையுறுபவர்க்கமுது வெத்திலங்காத்தல்பொழில்செய்தன் முன்னூலிங்மணங், திகழ்விலங்கூண்பிச்சை யறுசமயருக்குண்டி தேவாலயமவுஷதம், அறைதல் கற்போர்கன்ன நாலெட்டற

ங்களுமு னன்னைசெயலருமைமதவேள், அனுதினமுமனதினினைதரு
சதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ௯௪

இல்லறம்.

தந்தைதாய்சற்குருவை யிட்டதெய்வங்களைச் சன்மார்க்கமுளம
னைவியைத், தவறுதசுற்றத்தை யேவாதமக்களைத் தனைநம்பிவருவோர்
களைச், சிந்தைமகிழ்வெய்யவேபணிவிடைசெய்வோர்களைத் தென்புல
த்தோர்வறிஞரைத், தீதிலாய்திதியைப் பரிவுடையதுணைவரைத்தேனு
வைப் பூசுரர்தமைச், சந்ததஞ்செய்கடனையொன்றுமிவைபிழையாது
தான்புரிந்திடவில்லறம், சாருநல முடையராந் துறவறத்தோருமிவர்
தம்முடன்சரியாயிடார், அந்தரியுயிர்க்கெலாந் தாய்தனினு நல்லவ
ட்கன்பனே யருமைமதவேள்,அனுதினமுமனதினினைதருசதுரகிரிவ
ளரறப்பளீசுரதேவனே. ௯௫

புராணம்.

தலைமைசேர்பௌடிக மிலிங்கமார்க்கண்டமெழில்சாரும்வாமன்
மச்சமே, சைவம்பெறுங்கூர்மம் வரும்வராகங்காந்தசரிதமே பிரமா
ண்டமும், நிலைமைசேரிப்பது முயர்ச்சிவபுராணமா நெடியமால்கதை
வைணவம், நீதிசேர்காருட நாரதம்பாகவத நீடியபுராணநான்காம்,
கலைவலர்சொல்பதுமமொடுபிரமகைவர்த்தமேகமலாலயன்காதையாம்
கதிரவன்காதையே சூரியபுராணமாங் கனல்காதையாக்கினேயம்,அலை
கொண்டநதியும்வென் மதியுமறுகும்புனையு மத்தனேயருமைமதவே
ள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே.

புகழ்ச்சி,

பருகாதவமுதொருவர் பண்ணாதபூஷணம் பாரின்மறையாதநிதி
யம், பரிதிகண்டலராத நிலவுகண்டுலராத பண்புடையபங்கேருகங், க
ருகாதபுயல்கலைக ளருகாததிங்கள்வெங் கானிலுறையாதசீயங்,கருதரி
யவிக்குணமனைத்து முண்டானபேர்காசினியிலருமையாகும், தெரிய
வுரை செய்யின்மொழி கீர்த்திவருகல்வியொடு சிரிதயமீகைவதனம்,
திடமானவீரமிவை யென்றறிகுவார்களிச் செலமெலாங்கொண்டாட
வே, அருள்கற்றதருமென்ன வோங்கிடுந்தானதுரை யாகுமெமதரு
மைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுர
தேவனே. ௯௭

திருமாலவதாரம்.

சோமுகாசுரனைமுன்வதைத் தமரர்துயர்கெடச்சுருதிதந்ததுமற்
சமாம், சுரர்தமக்கமுதீந்த தாமையாம்பாய்போற்சுருட்டிமாநிலமெடு
த்தே, போமிரணியாக்கதனை யுயிருண்ட தேனமாம் பொல்லாதகனக
னுயிரைப், போக்கியதுநரசிங்கமுலகளந் தோங்கியதுபுனிதவாமன மூ
ர்த்தியாம், ஏழுமுமிராவணனை வென்றனிராவக னிரவிகுலம் வேராறு
த்தோன், ஏர்பாசிராமன்வரு கண்ணனெடுபலராம னிப்புவியயந்த

வீர்த்தோர், ஆமினியகற்கியினி மேல்வருவதிவைபத்து மரிவடிவமரு
மைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுர
தேவனே. ௯௮

சிவமூர்த்தி.

பிறைசூடியுமைமகேசன் விடையூர்தி நடமிடும்பெரிய னுயர்வது
வைவடிவன், பிச்சாடனன்காம தகனன்மறலியைவென்ற பெம்மான்
புறந்தகித்தோன், மறமலிசலந்தரனைமாய்த்தவன் பிரமன்முடிவெளவி
னோன்வீரேசுரன், மருவுநரசிங்கத்தை வென்றவரனுமைபாகன்வன
சரன் கங்காளனே, விரன்மேவுசண்டேச ரட்சகன்கடுமொந்திமிக்கசக்
கரமுதவினோன், விநாயகற்கருள்செய்தோன் குகனுமையுடன்கூடிமி
ளிரேகபாதன்சுகன், அறிவரியதக்ஷிணா மூர்த்தியொடிலிங்க மாமைய
னேயருமைமதவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரற
ப்பளீசுரதேவனே. ௯௯

கவிவணக்கம்.

மலரிதழ்பைங்குவளை மென்முல்லை மல்லிகை மருக்கொழுந்து
யர்கூவிளம், மற்றுமுளவாசமலர் பத்திரஞ்சிலசூடிமணி முடிதனிற்
பொறுத்தே, சிலெருக்கொடுவனத்துப்பூளை பச்சறுகு செம்முள்ளி
மலர்சூடவே, சித்தம்வைத்திடவுமங் கீகரித்திடுமகா தேவதேவாதெ
ரிந்தே, கலைவலருரைக்குநன் கவியொடம்பலவாண கவிராயனுமெ
ன்புன்கவியையுஞ்சூடியே மனமகிழ்ந்திடுவதுன் கடனாகுமடனாகமு
ம், அலைபெருகுகங்கையுஞ் செழுமதியமும்புனையு மமலனேயருமைம
தவேள், அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதே
வனே. ௱

அறப்பளீசுரசதகம்.

முற்றிற்று.

மெய்கண்டதேசிகன் திருவடிவாழ்க.

𑌤𑌥𑌾𑌹𑌿 ॥ ௭ ॥ 𑌨𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑍇𑌵 𑌕𑍍𑌷𑌤𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌜𑌾𑌤𑌿𑌰𑌸𑍍𑌯 𑌵𑌿𑌰𑌤𑌾 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌂 𑌪𑌾𑌨

𑌶𑍍𑌲𑌾𑌘𑌿𑌕𑌾 𑌬𑍀𑌜𑌾𑌵𑌪𑌨𑌪𑍍𑌰𑌵𑌣𑍋 𑌵𑍍𑌯𑍋𑌮𑌵𑌲𑍍𑌮𑍀𑌕𑌵𑌃 𑌕𑍇𑌵𑌲

𑌶𑍋𑌕𑌾𑌯 𑌶𑍍𑌰𑌿𑌤𑌃 । 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌣𑌾𑌶𑌕𑌾 𑌕𑌪𑍋𑌤

𑌸𑌂𑌧𑍋𑌪 𑌪𑍍𑌰𑌸𑌵𑌤𑍍𑌵𑌂 𑌤𑌨𑍍𑌵𑍍𑌯𑌾𑌸𑌕𑍍𑌤𑌕𑌨𑍍𑌯𑌾𑌨

𑌨𑌯𑌨 𑌨𑌾 𑌶𑍋𑌕𑌸𑌿𑌨𑍍𑌧𑍁𑌶𑌾𑌯𑌿 ॥

𑌰𑌾𑌜𑌾 ॥ 𑌸𑍍𑌵𑌗𑌤𑌂 𑌵𑌿𑌧𑍃𑌤𑌟𑌿𑌤𑌾𑌨𑍀𑌂 𑌮𑍁𑌨𑍀𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌵𑍇𑌶𑌾𑌯 𑌪𑍍𑌰𑌯𑍋𑌗

𑌇𑌤𑌿 ॥ 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌂 ॥ 𑌸𑌪𑍇𑌕𑌸𑌨𑍍𑌯𑌾 𑌮𑌾𑌕𑍍𑌤𑌿𑌕𑌸𑍁𑌮𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑌾𑌶𑍍𑌰𑌮𑍇𑌷𑍍𑌵

𑌸𑌵𑍇𑌷𑍁 𑌵𑌿 𑌨𑌾𑌮𑍇𑌯𑌂 𑌜𑌾𑌨𑌕𑍀 ॥

𑌰𑌾𑌮𑌃 ॥ 𑌸𑍍𑌵𑌗𑌤𑌂 । 𑌉𑌪𑌪𑌨𑍍𑌨𑌮𑍇𑌵𑌤𑌤𑍍 ॥ 𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌸𑍀𑌦𑌤𑍍𑌸𑍍𑌵𑌸𑍍𑌯

𑌤𑌸𑍍𑌯𑌾𑌃 𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑍇𑌨 𑌕𑌥𑌿𑌤𑌾 ॥ 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌂 ॥ 𑌕𑍁𑌤𑍍𑌰 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰

𑌕𑌥𑌯𑌨𑍍𑌤𑍁 ॥

𑌤𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑌤𑌿 𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑌃 ॥ ௨ ॥

𑌪 ॥ 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌵𑌿𑌂𑌶𑌜𑍇𑌨𑍇𑌵 𑌵𑌿𑌮𑌲𑌸𑌕𑌨𑍍𑌯𑌾𑌂 𑌨𑍀𑌤𑌃 𑌸𑌨𑌃

𑌶𑍍𑌰𑌿𑌰𑌾𑌮𑌭𑌦𑍍𑌰𑌮𑌹𑍀𑌰𑌾𑌮𑍇𑌵 । 𑌤𑌾𑌟𑌸𑍍𑌯 𑌨𑌾𑌟𑌨𑌪𑌰𑌸𑍍𑌯 𑌮𑌾

𑌯𑌿𑌨𑍋𑌽𑌪𑌿 𑌰𑌾𑌜𑍍𑌞𑌾 𑌮𑌹𑍇𑌨𑌾𑌪𑌿 𑌕𑌥𑌂𑌚𑌿𑌦𑌨𑍁𑌮𑌤𑍍𑌯𑍈𑌵 ॥

𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯 ॥ 𑌨𑌹𑌿 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰

𑌪𑍇𑌕𑍍𑌷𑍍𑌯𑌾 ॥ 𑌅𑌤𑌃 𑌪𑌰𑌂 𑌵𑌿𑌮𑌲𑌾 𑌸𑍍𑌵𑌿𑌯𑌨𑍇𑌪𑌥𑍍𑌯 𑌪𑌾𑌵𑌿𑌶𑍍𑌯𑌷𑌿॥

𑌸𑌪𑌕𑍍𑌷𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑍇 𑌪𑌾𑌕𑌾𑌰𑍇 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌪𑍍𑌰𑌮𑌯𑌿𑌷𑍍𑌯 ॥ 𑌇𑌤𑌿𑌪𑌰𑌿

𑌕𑍍𑌰𑌾𑌮𑌤𑌿 ॥

𑌰𑌾𑌜𑌾 ॥ 𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 ॥ 𑌸𑌹𑌰𑍍𑌷𑌂 ॥ 𑌕𑍁𑌤𑍍𑌰 ॥ 𑌕𑌥𑌂𑌪𑌰𑌂

𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑌪𑍇𑌷𑍋 𑌮𑍀𑌵𑍋 𑌦𑍃𑌶𑍍𑌯𑍇𑌤𑌿 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 ॥ 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌂

𑌸𑌪𑍇 𑌕𑌥𑌮𑌸𑌂𑌹𑌾𑌸𑌿𑌤𑌾𑌯𑌾𑌂𑌕𑌥𑌨𑌂 ॥ 𑌕𑌸𑌲𑌸𑍀𑌤𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑌪𑍇𑌕𑌾

𑌶𑍍𑌯𑌪𑌜𑍇𑌤𑌾𑌦𑍃𑌶𑍍𑌯𑍇 ॥

𑌤𑌤𑍇𑌨𑌾𑌨𑍇𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌸𑌪𑌦𑍀𑌕𑌿𑌤𑌿 𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌃 ॥

𑌰𑌾𑌮𑌃 ॥ 𑌦𑍀𑌰𑍍𑌘𑌂 𑌨𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯 ॥

𑌪 ॥ 𑌕𑌥𑌯𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌕𑌲𑌿𑌕𑌸𑍍𑌯𑌿𑌪𑍇𑌷𑍍𑌯𑌾𑌮𑌦𑌨𑍍𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌮𑍇𑌨𑌾𑌰

𑌮𑌾𑌂𑌶𑌯𑌸𑍍𑌤𑍁 । 𑌪𑌸𑍍𑌯𑌾𑌤𑌨𑌯𑌾𑌮𑌾𑌂 𑌨𑌪𑍇𑌤𑌿 𑌕𑍍𑌷𑌾𑌹𑌿𑌤𑌂

𑌮𑍇 𑌸𑌹𑍇𑌤 𑌨𑌶𑍍𑌮𑌶𑍍𑌪𑍇𑌤𑌃 ॥

𑌮𑌾𑌰𑍀𑌚𑌃 ॥ 𑌕𑌥𑌂 𑌰𑌾𑌮𑌂 𑌵𑌿𑌹𑌾𑌯 𑌵𑌿𑌂𑌶𑌜𑍇𑌷𑌃 𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑍋𑌦𑍍𑌗

𑌰𑌂𑌗𑌤𑌃 । 𑌤𑌦𑌹𑌂 𑌯𑌥𑌾𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌮𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌪𑌾𑌦𑌨𑌾𑌯 𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 𑌸𑌦

𑌯 𑌪𑍍𑌰𑌪𑌸𑌿𑌤𑌮𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌿𑌷𑍍𑌯𑍇 ॥ 𑌇𑌤𑌿 𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑌂 𑌨𑌾𑌟𑌯𑌤𑌿 ॥